ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2306/33 – 2022 නොවැම්බර් මස 16 වැනි බදාදා – 2022.11.16
*2306/33 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை

***2022 ஆம் ஆண்டின் 168 ஆம் இலக்கக் கட்டளை***

எனது குறிப்பு இல. : 4-3/11/2018/H/500.
பிர. செய. குறிப்பு இல. : BER/4/5/2/80.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் இருப்பாட்சியை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", இல.1200/6,
இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, நவெம்பர் 11.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், பேருவளை.

2. **காணியின் விபரம்** : மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 736, பிணிதியமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில், வடுகொட கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2021.06.20 ஆம் திகதிய Ka/BER/ 2020/697 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர்கள், விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டுகளின் எல்லை:

01. **துண்டு 'A' - குறிப்பிடப்படவில்லை - விஸ்தீரணம் : 0.0012 ஹெக்டயார்**

வடக்கு: மீமனகே கேமசிறி பெர்னாண்டோவினால் உரிமைகோரும் பொதுபிட்டியவத்தை மற்றும் எஸ். டி. ஜயநெத்தியினால் உரிமைகோரும் பொதுபிட்டியவத்தை; கிழக்கு: வீதி மற்றும் உரிமைகோருவோரை கண்டுபிடிக்க முடியாத பொதுபிட்டியவத்தை; தெற்கு: துண்டு B; மேற்கு: மீமனகே கெனட் கேமசிறி பெர்னாண்டோவினால் உரிமைகோரும் பொதுபிட்டியவத்தை .



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*02.* **துண்டு 'B' - பொதுபிட்டியவத்தை - விஸ்தீரணம் : *0.0103* ஹெக்டயார்**

வடக்கு: துண்டு A மற்றும் வீதி; கிழக்கு: உரிமைகோருவோரை கண்டுபிடிக்க முடியாத பொதுபிட்டியவத்தை மற்றும் ஏ. என். பெரேரா மற்றும் இன்னும் சிலரினால் உரிமைகோரும் பேருவலகேவத்தை; தெற்கு: ஏ. என். பெரேரா இன்னும் சிலரினால் உரிமைகோரும் பேருவலகேவத்தை; மேற்கு: மீமனகே கென்னத் கேமசிறி பெர்னாண்டோவினால் உரிமைகோரும் பொதுபிட்டியவத்தை மற்றும் துண்டு A .

EOG *11-175*